1996 மார்ச் 1]

திருச்சி–சென்னை மெயின் ரோட்டில் இருப்பதால் நெருக்கடியும் அதிகமாக உள்ளது. ஆகவே இந்த அலுவலகத்தை லால்குடியில் அமைத்தால், எப்.சி.எடுக்க வருகிறவர்கள் சாவகாசமாக தங்கள் வாகனங்களை நிறுத்தி, தங்கள் வேலைகளை முடிக்க வசதியாக இருக்கும். அவர்களுடைய சிரமத்தைக் குறைக்கும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு ஒரு ஆணையை இட்டிருக்கிறார்கள். 10 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டால், உடனடியாக பகுதி அலுவலகம் அங்கே வைக்கலாம் என்று ஆணை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதையெல்லாம் பார்க்கிறபோது, அங்கே 4,500 வாகனங்கள்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை மனதில் கொண்டு, இந்த ஆண்டு கூடுதலாக வாகனங்கள் பதிவு செய்யப்படுமேயானால், உடனடியாக அரசு அதைப் பரிசீலித்து, முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 168, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

168—

அமெரிக்க கம்பெனிகளின் கூட்டமைப்பு ஒப்பந்தம்

**23406—திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்காக அமெரிக்க கம்பெனிகளின் கூட்டமைப்பு ஒப்பந்தம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

[1996 மார்ச் 1

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் 1,320 மெகாவாட் அனல் மின் நிலையம் அமைக்கும் பணியை அமெரிக்கக் கம்பெனியின் கூட்டமைப்பில், செயல்படுத்த இந்தியன் எலெக்ட்ரிசிட்டி சட்டம் 1948, பிரிவு 44 மற்றும் 1948-ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கல் சட்டப்படி 18 (அ) பிரிவின் கீழ், தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மின் தேவை ஆண்டுக்கு 10 சதவீதம் அதிகரித்து வருகிறபடியால், பெருமளவில், மின் உற்பத்தித் திட்டங்களை தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கடலூர் அனல் மின் நிலையத்திட்டம் எவ்வளவு ரூபாய் முதலீட்டில் துவக்கப்படுகிறது. இந்தத் திட்டப் பணிகள் எப்போது நிறைவேறும் என்பதையும், இந்த அனல் மின் நிலையத்திற்குத் தேவையான எரிபொருளான நிலக்கரி ஆண்டொன்றுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். அதோடு, வடமாநிலங்களில் உள்ள நிலக்கரி உற்பத்தி குறைவாக இருப்பதால், வெளிநாடுகளிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: கடலூர் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல், 1,320 மெகாவாட் கொண்ட இரண்டு யூனிட்டுகளை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை M.O.U. i.e. (Memorandum of Understanding) நாம் செய்திருக்கிறோம். சுமாராக ஒரு மெகாவாட்டுக்கு 4 கோடி ரூபாய் என்று Central Electricity Authority of India (C.E.A.I.) முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகை நிர்ணயத்தை முடிவு செய்யவேண்டியது அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிறது. பொதுவாக ஒரு மெகாவாட் என்று சொன்னாலே, 4 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகும் என்று கணக்குப் போடுகிறார்கள். அது ரூ. 3.8 கோடியாகவோ ரூ. 3.7 கோடியாகவோ இருக்கலாம். மின் நிலையத்திற்கு தேவையான நிலக்கரியைப் பொறுத்தமட்டில், உள்நாட்டில் இருக்கிற நிலக்கரியைக் கொண்டுவர, கடலூரில் ஒரு ஜெட்டி அமைப்பதற்கு கடலூர் பவர் கம்பெனிக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம்.

1996 மார்ச் 1]

முற்பகல் 10.45

அதை அவர்கள் நிறுவ இருக்கிறார்கள். ஆகவே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அவர்கள் கேட்கிறபோது அனுமதி வழங்கலாம். இங்கேயிருக்கிற நிலக்கரியின் இருப்பைப் பொறுத்து, இருக்கிற தேவையைப் பொறுத்து வெளி நாடுகளிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு அரசு அனுமதி வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் மிகப்பெரிய திட்டம். இது வருகிறபோது தமிழ்நாட்டினுடைய மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். இதற்கான பணிகள் முழு வீச்சில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மரியம் உல் ஆசியா, சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும். வளவளவென்று பேசிக் கொண்டே இருப்பது துணைக்கேள்வி கேட்பதாகாது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாக கேட்கிறேன். அமெரிக்க கம்பெனிகளின் கூட்டமைப்பு, எந்த இந்திய நிறுவனத்துடன் இணைந்து கடலூர் அனல் மின் நிலையத்தை அமைக்க இருக்கிறது? இந்த அனல் மின் நிலையத்தில் வேலை வாய்ப்பில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா? அனல் மின்நிலையத்திற்கு தேவையான நிலக்கரி சப்ளை செய்ய அல்லது நிலக்கரி சப்ளை செய்யும் சுரங்கம் அமைக்க முன்வரும் தனியார் அல்லது அரசு நிறுவனத்திற்கு நிதியுதவி செய்வதற்கு இந்த அமெரிக்க கம்பெனிகளின் கூட்டமைப்பு முன்வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த International Constructing and Marketing Corporation என்று சொல்லப்படுகிற ICMC என்று சொல்லப்படுகிற அமெரிக்க நிறுவனம் இந்த அனல் மின் நிலையத்தை நிறுவுவதற்காக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. அவர்கள் எந்த இந்திய பார்ட்னரை வைத்துக் கொள்கிறார்கள் என்பது பிரச்சினையல்ல. நமக்கு திட்டம் வர வேண்டும் என்பது தான். முதலீடு வரவேண்டும். வெளிநாடுகளிலிருந்து அனல் மின் நிலையம் வர வேண்டும். மின்சார உற்பத்தி பெருகவேண்டும் என்று தான் நாம் பார்க்கிறோம். ஆகவே யாரை அவர்கள் இந்திய பார்ட்னராக வைத்துக் கொள்கிறார்கள் என்பது நமக்கு முக்கியமல்ல. நாம் அவர்களோடு ஒப்பந்தம்

செய்திருக்கிறோம். அதற்கு சட்ட திட்டங்கள் இருக்கின்றன, வழிமுறைகள் இருக்கின்றன. மத்திய அரசு அதற்கான நெறிகளை வகுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் தான் இதுபோன்ற திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆகவே நிலக்கரியைப் பொறுத்தவரையில் 'கேப்டிவ் மைன்ஸ்' என்று சொல்லப்படுகிற அந்த நிறுவனங்களே நிலக்கரியை தோண்டி எடுக்கிற அளவுக்கு சில புரபோசல் வேண்டுமென்று கேட்கிறபோது அதை 'கோல் இந்தியா' நிறுவனம் தான் முடிவு செய்ய வேண்டும். டெல்லியில் இருக்கிற, மத்திய அரசில் இருக்கிற கோல் மினிஸ்ட்ரி தான் அதுபற்றி முடிவு செய்யவேண்டும். நம்மைப் பொறுத்தவரையில் நிலக்கரியை வெளிநாட்டிலிருந்து கொண்டு வருவதற்கு நாம் அனுமதி அவர்களுக்கு வழங்கலாம். உள்நாட்டிலே அவர்களுக்கு தேவையான நிலக்கரி வழங்குவதற்கு நாம் ஏற்பாடு செய்யலாம். நம்மைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் வரவேண்டும். நம்முடைய மின்சாரப் பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்கு அது வர வேண்டும் என்று தான் நாம் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிற போது இது போன்ற நடைமுறைகளை நாம் பரிசீலித்து, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு தேவையான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். எஸ். வெங்கடேசன்.

திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற எங்களுடைய கனவு நனவாகிற வகையில் இந்தத் திட்டத்தை இங்கே அளித்திருக்கிற மின்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற வகையில் நிலத்தை ஆர்ஜிதம் செய்கிற வேலை அங்கே தொடங்கியிருக்கிறது. அதிலே சுமார் 800 ஏக்கர் நிலங்களை மட்டும் அவர்கள் கையகப்படுத்தி, மீதி 300 ஏக்கர் நிலங்களை, கடற்கரைக்கு அருகில் இருக்கிற நிலங்களை விட்டுவிடுகிற தன்மையை அவர்கள் செயல்படுத்துகிறார்கள். அதே நேரத்தில் நடுத்தர, ஏழை விவசாயிகளுக்கு விலைகளை மிகவும் குறைவாக கொடுக்கிற ஒரு நிலையிலே அந்தத் தனியார் நிறுவனம் செயல்படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அத்தனை நிலங்களையும் அந்த தனியார் நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கி கையகப்படுத்தவும், விவசாயிகளுக்கு அதிகமாக விலை நிர்ணயிக்கவும் உதவுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மின் திட்டங்களை

நிறைவேற்றுகிறபோது நம்மிடத்தில் இருக்கிற நிலங்களைக் கொடுத்தால் அதற்கு அரசு நிர்ணயிக்கிற விலையை நாம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு கொடுக்கிறோம். அல்லது நிலங்களை லீசுக்கு கொடுக்கிறோம். அதுபோன்ற நிலையை தான் நாம் வைத்திருக்கிறோம். சில இடங்களில் தனியார்களே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் வாங்குகிறபோது அவர்களே அங்கேயிருக்கிற விவசாயிகள், நிலச்சுவான்தார்கள் அல்லது நில உரிமையாளர்களிடத்தில் நிலங்களை தாங்களே விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கிற நிலங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் மனமுவந்து அந்தப் பகுதியில் திட்டம் வர வேண்டும் என்பதற்காக அந்தப் பகுதி மக்கள் ஒத்துழைப்பு கொடுத்து அந்தத் தனியார்களை உற்சாகப்படுத்துவதாக கூட சொன்னார்கள். அவர்களுக்கு தேவையான நிலங்களைத் தான் அவர்கள் வாங்க முடியும். 800 ஏக்கர் வாங்குகிறார்கள் என்றால், தேவையிருந்தால் தான் அதற்கு மேல் 400 அல்லது 500 ஏக்கர் வாங்குவார்கள். திட்டத்திற்கு எவ்வளவு தேவையோ அதைத்தான் அவர்கள் வாங்க முடியும். வேறு அடிஷனல் ஸ்கீம்ஸ் அவர்கள் வைத்திருப்பார்களானால் பக்கத்திலே இருக்கிற நிலங்களையும் அவர்கள் வாங்குவதற்கு சொல்லலாம். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை மனதில் கொண்டு, அந்தப் பகுதி மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு அந்த தனியார் துறையைச் சார்ந்தவர்களிடத்தில் பேசி, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவ முடியுமோ, எந்த அளவுக்கு அவர்களுக்கு சாதகமாக செய்ய முடியுமோ அந்த நிலையை மேற்கொள்ள வழி முறைகளை இந்த அரசு ஆராயும், நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 169, திரு. சு. அர்ச்சுனன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

169—

காந்தள் மலர் விவசாயம்

**82440—திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—